ஜெம்ஸ் சத்தம்

Since 1972

ஆகஸ்ட் 2017

கர்த்தாவே, என்னை நியாயம் விசாரியும், நான் என் உத்தமத்திலே நடக்கிறேன்; நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன், ஆகையால் நான் தள்ளாடுவதில்லை. (சங். 26:1)

நேபாள் பணித்தளங்களில்
ஜெம்ஸ் பொதுக்குழு உறுப்பினர்கள்

ஜெம்ஸ் சத்தம்

Since 1972

GEMS Satham

Transforming Peoples to Transform Nations

அன்பின் மடல்

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

ஆராய்ந்து அறியும் ஆண்டவர் – 10

ஜெம்ஸ் ஆங்கிலப் பள்ளி – தர்பங்கா – 13

ஜெம்ஸ் செயல் மையம் திறப்பு விழா – 14

ஜெம்ஸ் பொதுக்குழு கூடுகை – 17

பணித்தளச் செய்திகள் – 18

முன்னேற்றப் பணி முகவரிகள் – 29

Published by

Gospel Echoing Missionary Society

Regd. office :

GEMS Educational Media Services
11,13th Cross street, New colony,
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

Field office :

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

'ஜெம்ஸ்' என்பது,

Gospel Echoing Missionary Society

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்சிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் (எபே. 1:23). வேகமாகக் கடந்து செல்லும் காலச் சக்கரத்தின் நடுவே, அநேகர் **"திருப்தியற்ற வாழ்வு"** வாழ்வதனைக் காணமுடிகிறது. தேவனை அறிந்தோம் என்று கூறுபவர்களும் இதற்கு விதிவிலக்கில்லா வண்ணம் வாழத் தொடங்கியுள்ளனர். வேறு சிலரோ, **திருப்திக்காணக்கூடாதவைகளில் திருப்தி கண்டு அடங்கிப்போய்விட்டனர்**. உலகத்தாரில் இது காணப்படுவது ஆச்சரியமில்லை, ஆனால் தேவனை அறிந்தவர்கள் மத்தியில் இது காணப்படுவது அதிர்ச்சிக்குரியது.

முதலாவது, நம்முடைய தேவன் யார் என்பதனை மேற்கண்ட காரியத்தின் அடிப்படையில் காண முயல்வோம். "...என் ஜனங்கள் நான் அளிக்கும் **நன்மையினால் திருப்தியாவார்கள்** என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 31:14). அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் **நன்மை உண்டாகும்படி,** சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும்

ஒரே வழியையும் கட்டளையிட்டு, அவர்களுக்கு **நன்மை செய்யும்படி** நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடு பண்ணி, அவர்கள் என்னை விட்டு அகன்றுபோகாதபடிக்கு எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்தில் வைத்து, அவர்களுக்கு **நன்மை செய்யும்படி அவர்கள்மேல் சந்தோஷமாயிருந்து.....** அவர்களைக் குறித்துச் சொன்ன எல்லா நன்மைகளையும் அவர்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்கிறார். (எரே.32: 39-42)

தங்களுடைய தொடர்ச்சியான பாவ வாழ்க்கையின் நிமித்தம் சிதறடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்ட ஜனத்தினை, திரும்பக் கட்டும் எண்ணத்தில் தேவன் தம்மை இப்படித்தான் வெளிப்படுத்துகிறார்; **இது அவருடைய இருதயத் துடிப்பு. நொறுக்கப்பட்ட ஜனத்தினை மீண்டும் தூக்கி நிறுத்தும் தேவனுடைய ஏக்கம்** இங்கே வெளிப்படுகிறது.

இதனை அறிந்த சங்கீதக்காரனும், **சாந்தகுணமுள்ளவர்கள்** புசித்து திருப்தியடைவார்கள் என்றும் (சங். 22:26), உமது ஆலயத்திலுள்ள **சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்** என்றும் (சங். 36:8), உத்தமர்கள் பஞ்சகாலத்திலும் திருப்தியடைவார்கள் என்றும் (சங். 37:19), நீர் உம்முடைய **கையைத் திறக்க** நன்மையால் திருப்தியாவார்கள் என்றும் (சங். 104:28), அறிந்தவனாய், "நன்மையால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார், எனவே என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி" என்று **பாடி மகிழ்கிறான்**. (சங். 103:1,5)

காலையில் எழும்பும்போது, உம்முடைய **சாயலால் திருப்தியாவேன்** என்று கூறி (சங். 17: 15), அதனை வாஞ்சித்து, **நாள் ஒன்றைத் துவக்கும்போதே அவருடைய பிரசன்னத்தில் துவக்குவதனைக் குறித்து** பேசுகிறான். (சங். 17:15)

புதிய ஏற்பாட்டில் பவுலும், **"எவ்விடத்திலும் எல்லாவற்றிலும்** திருப்தியாயிருக்க" நான் போதிக்கப்பட்டேன் (பிலி. 4:12) என்றே முழங்குகிறார். கூடவே, எந்த நிலைமையிலும் **மனரம்மியமாயிருக்கக்**

கற்றுக்கொண்டேன் என்று தன் மகிழ்ச்சியை தெரிவிக்கிறார் (பிலி. 4:11). கூடவே, இதனைப் பெற்றுக்கொள்வதற்கு அடிப்படையான காரணம் **கிறிஸ்து தன்னைப் பெலப்படுத்துவதே** என்றும் சொல்கிறார். (பிலி. 4:13)

அப்படியானால், தேவஜனங்கள் திருப்தியற்ற வாழ்வு வாழ்வதற்கான காரணம் என்ன? **திருப்திபெறாத வாழ்க்கைக்கும் பாதாளத்திற்கும்** மிகுந்த சம்பந்தம் உண்டு என்பதனை நாம் அறிதல் அவசியம். "பாதாளமும் அழிவும் திருப்தியாவதில்லை" (நீதி. 27:20). அங்கே, எரிகிற அக்கினியும், போதுமென்று சொல்லத் தெரியாததே (நீதி. 30:16). **பாதாள சிந்தையோடு இணைக்கப்பட்டிருக்கும் கண்களும், காதுகளும் ஒருபோதும் திருப்தி செய்யக்கூடாதவைகளே.** (பிர. 1:8)

அப்படியே, **பாதாள சிந்தைகொண்ட மனதில் உண்டாகும் பொருளாசையும்** திருப்தியடையக்கூடாததே. பணப்பிரியன் பணத்தினால் திருப்தியாவதில்லை. செல்வப் பிரியன் செல்வத்தினால் திருப்தியடைவதில்லை (பிர. 5:10) என்பதே ஞானியின் கண்டுபிடிப்பு.

போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் (1தீமோ. 6:8), என்ற வார்த்தைகள் **திருப்தியான வாழ்வுக்கு "மனநிலை" மிகவும் முக்கியம் என்பதனை கோடிட்டுக் காட்டுகின்றது.**

யோவான் ஸ்நானகனிடம் வந்த ஆயக்காரரும் போர்ச்சேவகரும், "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்றே கேட்டனர். உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாக ஒன்றும் வாங்காதிருங்கள் என்று வரி வசூலித்த அதிகாரிகளைப் பார்த்தும், "நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும், பொய்யாய்க் குற்றம் சாட்டாமலும் உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள்" என்று போர் சேவகர்களுக்கு (இன்றைய காவல் துறையினர்) கட்டளையிடுகிறான் (லூக். 3:13,14). **மனநிலையே நிறைவுக்கு அடித்தளம் இடுகிறது. மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து வாழ்வதாலேயே அநேகர் தங்கள் மனதைப் பறிகொடுத்துவிட்டனர். எனக்கு**

ஏன் அப்படியிருக்கக் கூடாது என்ற வார்த்தையின் பின்னணியில் இருக்கும் பெருமை, தன்னை மறைத்துக்கொள்ள முயற்சித்தாலும், வெளிப்பட்டு அமைதியைக் கெடுத்துப்போடுகிறது என்பதனை அறிந்தவர் சிலரே.

இந்த மனநிலையை உருவாக்க, தேவபிரசன்னத்தினை உணர்வதே சாலச் சிறந்தது. கூடவே, அதனை தக்கவைத்துக்கொள்வதும் நல்லது. “நீங்கள் பண ஆசையில்லாதவர்களாயிருந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். நான் உன்னைவிட்டு விலகுவதில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே (எபி. 13:4) என்ற தேவ வார்த்தையின் ஆழத்தை அனுபவிப்பவர்கள் எத்தனை பேர்?

இயேசு போதுமே இயேசு போதுமே
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே

என்ற பாடல் வரிகள் அநேக நேரங்களில் பாடலுக்காக மாத்திரமே பாடப்படுகின்றன, **அனுபவித்துப் பாடுவோராக** மாற தேவன் நமக்கு உதவி செய்வாராக.

இரத்தத்தில் மூழ்கி கிடந்து, கவனிப்பாரற்று இருந்தவளை, மிதிக்கப்படத்தக்கதாய் வீசி எறியப்பட்டவளை கண்டெடுத்த மேய்ப்பர் வாழ்வு தருகிறார், பின்னர் நிர்வாணத்தை மூட ஆடை தருகிறார். சுத்தப்படுத்தி, எண்ணை பூசி சித்திரத் தையலாடையை உடுத்துவித்து, ஆபரணங்களால் அலங்கரிக்கிறார், ராஜ்யங்களைச் சுதந்தரிக்கவும் வைக்கிறார். பொன்னினாலும், வெள்ளியினாலும் அலங்கரிக்கப்படுகிறாள். அழகாய் மாறின **அவளோ ...... வேசித்தனத்தினால் தன்னைத் திருப்திப்படுத்த முனைகிறாள்**. ஏஜமான், **தன்னைக் கண்டெடுத்து காப்பாற்றியவர் தந்தவைகளைத் தாரைவார்க்கிறாள்.** சோரமார்க்கம் அவளைத் தன்னைக் கண்டவர்களிடத்தில் எல்லாம் நெறிதவறி நடக்கச் செய்கிறது. அப்படியிருந்தும் அவள் திருப்திகொள்ளவில்லை. (எசே. 16:1-29)

மேற்சொல்லப்பட்ட இந்த உதாரணம் இன்று அநேகருக்குப் பொருந்தும். **இச்சைகளைத் தூண்டும் காமக் காட்சிகளை** (pornography) **ருசிக்க ஆரம்பித்து, பின்னர் விடுதலை பெறக்கூடாமல் தவிப்போர் ஆயிரங்கள்.** ஆண்டவரின் பிள்ளைகளும் இதில் அடங்குவர்.

ஆவிக்குரிய மேட்டிமை கொண்டு, இன்றும் புதிய அனுபவம் என்று கூறி அதில் மயக்கமுற்று, ஆதிநிலையில் இருந்தும் பிரதிஷ்டைகளிலிருந்தும் விழுந்துபோய் ஆவிக்குரிய வேசித்தனத்தில் மாட்டிக்கொண்ட ஒரு பெருங்கூட்டம் இன்று எழும்பி நிற்கிறது.

இவைகள் தேவ கோபத்திற்கு தேவசபையை மாற்றிக்கொண்டுவருவதோடு, சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கத் தேவனைத் தள்ளிவிடுமோ என்ற பயம் எனக்கு உண்டு. பாபிலோனுக்குத் தன் ஜனத்தை சிறையாக அனுப்பிவைக்க தேவன் விரும்பவில்லை; ஆனால், **பாபிலோன் சிறைவாசமே, அவர்களை சுத்திகரிக்கவும், ஒன்றிணைக்கவும் கூடுமென்றால்,** தேவன் வேறு வழியின்றி தம்முடைய ரத்தத்தால் மீட்டுக்கொண்ட சபையை பாபிலோனிய அனுபவத்தில் கொண்டுசெல்லவேண்டி வரலாமே! அதனுடைய சாயல் ஆங்காங்கே தெரிகிறதே. எனவே, **சபையும், சபைத் தலைமையும் மனம் திரும்பவேண்டிய அவசரமுண்டே!**

தன்னை தூக்கி எடுத்து, சுத்திகரித்து, சிங்காசனத்தில் உட்காரவைத்தவரின் **ஏக்கத்தையும் நோக்கத்தையும்** சபை புரிந்துகொள்ளவேண்டுமே.

ஆரங்கள் பூட்டி அலங்கரித்து உன்னை

அத்தன் மணவாட்டியாக்கினதுமன்றி

எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை

இன்னும் உன்மேற் சோனா மாரிபோல் பெய்தவருக்கு துரோகம் செய்யாமல் வாழவேண்டுமே.

மாறாக, **அவரால் திருப்தியாகாமல், அவர் தரும் கிருபையால் திருப்தியாகாமல் எதை எதையோ வாஞ்சித்து அவைகளுக்கு அவர் பெயரைத்**

தரித்து, அவர் தராத அனுபவங்களை அவருடையது என்று சொல்லித் திரிவது சரியாகுமோ!

கூடவே, தந்தவரின் நோக்கம் புரியாமல் காற்றை உட்கொள்கிற **காட்டுக் கழுதையைப்** போல ஓடித்திரிவதும் சரியானதோ!

காண்டாமிருகத்தினைப் போன்று பெலன் பெற்று, ஆனால் அந்த பெலத்தினை சேவிக்கவோ, படைச்சால்களை உழவோ ஏரில் பூட்டப்பட்டு உபயோகிக்கவோ, பரம்படிக்கவோ, களஞ்சியத்தினை நிரப்பும் பணியினை செய்யவோ கூடாததாக இருந்தால் என்ன பலன்?

ஆவிக்குரிய அனுபவங்கள், இன்னமும் அன்பர் இயேசுவின் சிலுவையைக் காணக்கூடாதிருக்கும் கோடிகளுக்கு உபயோகப்படவேண்டுமேயல்லாமல், ஆடிப் பாடி மகிழ்வதற்கு அல்ல. இந்த நோக்கத்தில் வாழக்கூடாதவர்கள் அனைவரும் இன்னும் ஒரு புதிய அனுபவம் வேண்டும் என்ற பாவனையிலேயே வாழ ஆரம்பித்து தங்களை அழித்துக்கொள்வர்.

மற்றொரு எடுத்துக்காட்டு, மோசே, தேவன் குறித்தக் காலத்தினைக் குறித்த அறிவு இல்லாமல், தன் சுய பெலத்தினை உபயோகித்து, எகிப்தியன் ஒருவனை சாகடிக்கிறான். ஒருவேளை அது தன் உடன் சகோதரனுக்கு உதவி செய்யவே என்றாலும், பின்னதாக அவனை தேசத்தை விட்டே அகற்றிவிடுகிறது.

மீதியான் தேசத்திற்கு ஓடிப்போன அவன் ரெகுவேலின் வீட்டில் தங்கி, மணமுடித்து, அடங்கிப்போய்விட்டான். இதனை ஆங்கில வேதம் 'Content to stay" என்றே அழைக்கிறது. இப்படி திருப்தியானவர்களை வேதம் நமக்கு எச்சரிக்கையாகவே காண்பிக்கிறது. (யாத். 2:2)

அழைக்கப்பட்ட இடத்தில் இல்லாமல் வாழும் பலர், இப்படி "விரக்தியாக" வாழ்வதனை "திருப்தியாக" இருக்கிறோம் என்று கூறி தங்களை ஏமாற்றிக்கொள்ள வாய்ப்புண்டு.

வேறு சிலர், அப்பத்துக்காக அலைந்து திரிந்த வாலிபனான

ஒரு லேவியனைப் போல (நியா. 17:8), இலக்கில்லாமல் ஓடுகிறவர்களாக இருக்கலாம். கர்த்தரின் பெயரில் ஆனால், கர்த்தர் வெறுக்கிற காரியங்களைச் செய்ய ஒப்புக்கொடுத்த அந்த வாலிபன், பின்னதாக, "தான் ஏன் ஒரு குடும்பத்திற்கு மாத்திரம் என்று எண்ணி, ஒரு கோத்திரத்திற்கு ஆசாரியன் என்ற பட்டத்தினைக் கண்டபோது, தாண் கோத்திரத்தோடு புறப்பட்டுப் போன காரியம் நியா. 17 -ம் மற்றும் 18 -ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளதே.

இவனிடத்தில் தீர்க்கதரிசனமும் கேட்க வருகிறார்கள் (நியா. 18:5,6). அதுவும் கர்த்தரின் நாமத்தில், இப்படி **"பிரஸ்தாபம்" என்ற ஒன்று அநேகரை இயக்குவிப்பதினால் திருப்தி என்ற பதத்தினை இழந்தவர்கள் உண்டு**. அப்படிப்பட்டவர்களின் மனநிலையை நியா. 18:20 விவரிக்கிறது. செய்யும் தவறுகள் இன்னமும் ஆழத்திற்குக் கொண்டுபோகிறதினை அறிந்தும், **"மனது இதமியப்பட்டதினால்"** தவறுக்கு இசைந்துபோகிறான் அவன்.

எனவே, மனதின் நிலை எப்படி இருக்கிறது என்பதனை அடிக்கடி தேவப் பிள்ளைகள் சோதித்துப் பார்ப்பது நல்லது.

"எந்தன் ஏக்க விருப்பம் எல்லாம்

உம் இதய துடிப்பாக மாற்றும்" என்ற பாடல் வரிகள் நமது ஜெபமாக மாறட்டும்.

பொருளையோ, பணத்தையோ குறித்து மாத்திரமல்ல, நம்முடைய ஆவிக்குரிய காரியங்களையும் அலசி ஆராயும் நேரம் இது. நம்முடைய **அழைப்பையும், உழைப்பையும்** கூட அளவிட்டுப் பார்ப்பது நல்லது. திருப்தி செய்யாத ஊழியம் வேண்டாம், வீண் ஆசைகளும் வேண்டாம், வீண் உழைப்பும் வேண்டாம். மனரம்மியமாய் தேவகாரியங்களை நடப்பித்து தேவ இராஜ்யம் ஸ்தாபிப்போம்.

திருப்தி செய்யாத பொருளுக்கான ஏக்கம்
திரும்பி வராத நாட்களுக்கான போராட்டம்
திசை தெரியாத இலக்குக்கான ஓட்டம்
திகைத்து நின்று யோசிக்கும் கூட்டம்

வேண்டாம்! வேண்டாமே!!

திருப்தி செய்யும் அவர் பிரசன்னம்
திருப்பணி கொண்டுவரும் ஆனந்தம்
திருத்துவ தேவனின் அன்பின் வெள்ளம்
திருச்சபைகள் தோன்றச் செய்திடும்

தேடுவோம்! நாடுவோமே!!

திக்கெட்டும் அவர் புகழ் பாடுவோம்
தீயவன் நம்மை திசை திருப்பிடான்
திருக்கரத்தால் நம்மை நடத்திச் செல்வார்
தினந்தோறும் புதுக்கனியால் நிரப்பிடுவார்

செல்வோம்! வெல்லுவோமே!!

அறுவடைப் பணியில்
அன்பு சகோதரன் D. அகஸ்டின் ஜெபக்குமார்

ஆராய்ந்து அறியும் ஆண்டவர்



ஆண்டவரை அறிந்தவர்களாக அவரை ஆராதிப்பதே அர்த்தமுள்ள ஆராதனை. அவரை அறிகிற அறிவே நம்முடைய சுபாவங்களில் மாற்றங்களைக் கொண்டுவரும். சுபாவங்களில் மாற்றம் உண்டாகவில்லையெனில், ஆவிக்குரிய வாழ்க்கையில் எங்கோ பிழை இருக்கிறது என்று அர்த்தம். அதனால் அவருடைய அனுக்கிரகம் நம்முடைய வாழ்க்கையிலிருந்து வெளியேறிச் சென்றுவிடும்; எனவே, அதனை நாம் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும். அவரை அறிகிற அறிவு நமது உள்ளான மனிதனில் பெரியதோர் மாற்றத்தைக் கொண்டுவரும்; அத்துடன், உலகத்தின் மாயைகளையும் நாம் அடையாளம் கண்டுகொள்ள முடியும்; மற்றவர்களது தேவைகளை உணர்ந்துகொள்ள முடியும்; ஜெப வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும், ஆவிக்குரிய வாழ்க்கையின் ஓட்டத்தின் வேகம் அதிகரிக்கும்.

சிலருடைய சுபாவங்களில் மென்மையைப் பார்க்க இயலாது, அவர்களுடைய உள்ளான கடினத்தன்மையில் மாற்றம் உண்டாயிருக்காது; காரணம், ஆண்டவரை அவர்கள் சரியாக அறியாததே. அப்படிப்பட்டோருடைய உதடுகளிலிருந்து புறப்படும் துதிகள் மற்றும் வார்த்தைகள் வல்லமை பொருந்தியதாயிராது. எனவே, வசனத்தின் அடிப்படையில் அவரை அறிவதே வாழ்க்கைக்கு முதன்மையானது.

கர்த்தாவே, என்னை நியாயம் விசாரியும், நான் உத்தமத்திலே நடக்கிறேன்; நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன், ஆகையால் நான் தள்ளாடுவதில்லை. (சங் 26:1)

தேவனுக்கு முன்பாக தன்னை ஓர் திறந்த புத்தகமாக நிறுத்துகிறான் தாவீது. கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப்பாரும்; என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிட்டுப்பாரும் (சங் 26:2) என்று வேண்டுகிறான். தாவீதை கொன்றுபோடும்படியாக

சவுல் தொடர்ந்துகொண்டிருந்தான்; நான்கு புறமும் நெருக்கப்பட்டு, இக்கட்டான சூழ்நிலையிலிருக்கும்போது தாவீது இந்த சங்கீதத்தை எழுதுகிறான். **இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தன்னை ஆராய்ந்து அறிந்துகொள்ளும்படியாகவே தாவீது முறையிடுகிறான்.** தாவீதைப் போன்ற ஜெபம் நம்மிடத்தில் உண்டா? ஜெபமாகத் தொடங்கி, "....சபைகளிலே நான் கர்த்தரைத் துதிப்பேன்" (சங் 26:12) என்று துதியோடு நிறைவுசெய்கிறான் தாவீது. துதிப்பதற்கு முன்பாக சில காரியங்களை தேவனுக்கு முன் வைக்கிறான் தாவீது. அவன் பாவம் செய்கிற மனிதனா? பாவிகளோடு இணைந்திருக்கிறவனா? அல்லவே; எனினும், இந்த சங்கீதத்தின் பன்னிரெண்டு வசனங்களில் கிட்டத்தட்ட பதினாறு இடங்களில் தன்னை உத்தமனாக நிறுத்துகிறான் தாவீது. கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல சமுதாய வாழ்க்கையிலும் தன்னை உத்தமனாக நிறுத்துகிறான் தாவீது. கர்த்தரை முழுவதுமாக நம்புகிறவனாயிருந்தபோதிலும், அவரோடு உள்ள உறவை ஆராய்ந்து அறிகிறான்.

பிரியமானவர்களே, தேவனுக்கு முன்பாகவும், மனிதர்களுக்கு முன்பாகவும் தன்னை உத்தமனாக நிறுத்துகிற மனிதனுக்கு, தன்னை ஆராய்ந்துபார்க்கவேண்டிய அவசியம் உண்டோ! நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி, உம்முடைய பீடத்தைச் சுற்றிவருகிறேன் (சங் 26:7) என்று சொன்னபோதிலும், அவரிடத்தில் செல்லும்போது தான் குற்றமற்றவனாயிருக்கவேண்டும் என்பதற்காக, தேவனுடனான உறவு, மற்றவர்களுடனான ஐக்கியம், தனது கைகளின் மற்றும் கால்களின் கிரியைகளை மீண்டும் ஒருமுறை ஆராய்ந்து பார்க்கிறான் தாவீது. கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும், உமது மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன் (சங் 26:8) என்று கொஞ்சம் கொஞ்சமாக தேவனுக்கு அருகாமையிலேயே தன்னை கொண்டுசெல்லுகிறான் தாவீது.

தேவன் தனக்குச் செய்தவைகளை ஞாபகமூட்டுகிறான், உரத்த தொனியோடு தேவனைத் துதிக்கிறான், மற்றவர்களும் அவரை அறிந்துகொள்ளும்படியாக அதிசயங்களை விவரிக்கிறான். கைகளிலே தீவினை இருக்கிறவர்களுடனேயான வாழ்க்கையை வெறுக்கிறேன். "என் ஆத்துமாவைப் பாவிகளோடும், என் ஜீவனை இரத்தப்பிரியரோடுங் கூட வாரிக்கொள்ளாதேயும்" (சங். 26:9) என்று வேண்டுகின்றான். நியாயம் விசாரிக்கப்படும்போது, இடதுபுறத்தில் நிற்பவர்களோடு

அல்ல வலதுபக்கத்தில் நிற்பவர்களோடு நிற்கவே விரும்புகிறான். தற்போதைய நிலையை மனதில்கொண்டவனாக மாத்திரமல்ல, வரப்போகும் நாட்களை மனதில் கொண்டவனாகவே வாழுகிறான் தாவீது.

இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தபோதிலும்,“நானோ என் உத்தமத்திலே நடப்பேன்; என்னை மீட்டுக்கொண்டு என்மேல் இரக்கமாயிரும்” என்று அவரது இரக்கத்தின் மேலேயே நம்பிக்கையாயிருந்தான் தாவீது. மேலும், “என் கால் செம்மையான இடத்திலே நிற்கிறது” (வச. 11). என்று அனுபவத்தைச் சார்ந்து அல்ல அனுக்கிரகத்தைச் சார்ந்தே தான் வாழுகின்றதை தாவீது வெளிப்படுத்துகின்றான்.

என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே (1கொரி. 4:4) என்று பவுல் சொன்னதைப் போல, நம்முடைய கண்களுக்கு நாம் குற்றமற்றவர்களாகக் காணப்பட்டாலும், தேவனே நம்மை ஆராய்ந்து அறிகிறவர் என்ற அறிவு அவசியமானது. நம்முடைய காரியங்கள், செயல்பாடுகள், தேவனுடனான உறவு, மற்றும் மனிதர்களுடனான ஐக்கியம் அனைத்தும் சரியாயிருக்கிறது, என்னுடைய மனம் என்னை ஒருபோதும் குற்றப்படுத்தினதில்லை என்று நம்முடைய கண்களினால் நம்மை நாமே எடைபோட்டுக்கொண்டு நாம் திருப்தியடைந்துவிடக் கூடாது. இவைகளினாலே நாம் நீதிமான்களாகிவிடுகிறதில்லை, நம்மை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆண்டரே என்னை ஆராய்ந்து அறியும் என்ற வேண்டுதல் நம்முடைய உதடுகளிலிருந்து புறப்படட்டும்.

ஆனதால், **கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்**; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும் (1கொரி 4:5) என்றே எழுதுகிறார் பவுல். நம்முடைய நடைகளின் மூலமாக, வேலைகளின் மூலமாக நம்மை நாம் வெளிக்காட்டலாம், என்றாலும் கர்த்தரே நம்முடைய இருதயத்தின் யோசனைகனை ஆராய்ந்து அறிந்தவர். **ஆண்டவரே என்னை ஆராய்ந்து அறியும் என்ற ஜெபம் நம்மிடத்திலிருந்து புறப்படட்டும், அப்போது ஆண்டவரால் நாம் புகழப்படுவோம்**.

ஜெம்ஸ் ஆங்கிலப் பள்ளி - தர்பங்கா

பீஹார் மாநிலம், தர்பங்கா பணித்தளத்தில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் ஜெம்ஸ் ஆங்கிலப்பள்ளி ஜுலை 5 அன்று ஜெபத்துடன் தொடங்கிவைக்கப்பட்டது. ஜெம்ஸ் பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்க, கல்வி ஊழியத்தின் தேவையினையும், கர்த்தரை அறிவிக்கும் சாதனமாக அவைகள் திகழுவதனையும் பகிர்ந்துகொண்டு, இப்பணித்தளத்தில் செய்யப்படவிருக்கும் கல்வி ஊழியங்களை ஜெபத்துடன் தொடங்கிவைத்தார் சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

ஜெம்ஸ் செயல் மையம் திறப்பு விழா

பாபுவா

ஜெம்ஸ் பொதுக்குழு கூடுகை

ஜெம்ஸ் பொதுக்குழு கூடுகை

ஜெம்ஸ் ஊழியத்தின் பொதுக்குழு கூடுகை, ஜுன் 29, 30 மற்றும் ஜுலை 1 ஆகிய மூன்று தினங்கள் சிக்காரியா ஜெம்ஸ் பணித்தள வளாகத்தில் நடைபெற்றது. "தன் பிரபுக்களை அவன் மனதின்படி கட்டவும், தன் மூப்பர்களை ஞானிகளாக்கவும், அவனைத் தன் வீட்டுக்கு ஆண்டவனும், தன் ஆஸ்திக்கெல்லாம் அதிபதியுமாக்கினான்" (சங் 105:22) என்ற வசனங்களை அடிப்படையாகக் கொண்ட '**Anointed & Authorized to Administer & to Advance'** என்ற கூடுகையின் கருப்பொருளை பகிர்ந்துகொண்டார் Dr. அசோக் குமார். சகோ. பிரடி ஜோசப் (சென்னை) கூடியிருந்தோரை ஆராதனைக்குள் வழிநடத்த, காலை தியான வேளையின்போது ஆகாய் தீர்க்கதரிசன புத்தகத்திலிருந்து சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் செய்தியைப் பகிர்ந்துகொண்டதைத் தொடர்ந்து, கூடுகையின் சிறப்புச் செய்தியாளராக அழைக்கப்பட்டிருந்த GIFT ஊழியத்தின் நிறுவனர் Dr. விஜய்காந் மூன்று நாட்களிலும் கர்த்தருடைய செய்தியைப் பகிர்ந்துகொண்டார். அழுத்தமான செய்தியும், அனுபவ சாட்சியும் கூடியிருந்தவர்களை வெகுவாகத் தொட்டது.

கடந்து வந்த பாதைகளில் கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து நன்றி சொல்லவும், புதிய தீர்மானங்களோடு இளைப்படையாமல் தொடர்ந்து பயணிக்க தங்களை அர்ப்பணிக்கவும் கர்த்தர் உதவி செய்தார். இக்கூடுகையின்போது, ஜெம்ஸ் இணை பொதுக் காரியதரிசியாக Dr. அசோக்குமார், நிர்வாக இயக்குநராக சகோ. எமர்சன் மற்றும் சபை நிறுவும் ஊழியத்தின் இணை இயக்குநராக சகோ. ராகேஷ் ஆகியோர் ஜெபத்துடன் பொறுப்பேற்றனர். ஜெம்ஸ் ஊழியத்திற்காக உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஜெபித்தனர். தேவ நாமம் மகிமைப்பட்டது.

பொதுக்குழு கூடுகையினைத் தொடர்ந்து, பாபுவா, தர்பங்கா மற்றும் நேபாள் ஆகிய பணித்தளங்களில் நடைபெறும் ஊழியங்களையும் பொதுக்குழு உறுப்பினர்கள் பார்வையிட்டனர்.

பணித்தளச் செய்திகள் - ஆகஸ்ட் 2017

மைதிலிக் கோட்டம்

ஆகஸ்ட் 01 ராதோபூர்

ராதோபூர் மாவட்டத்தில் 5 பஞ்சாயத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சிகனி, பகதாடோலா, பேங்கா, சராய்கட், கம்ரைல், பச்மனியான் ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக பிரேந்திர சர்மா, கஜானந்த்சிங், ராஜேந்திரசர்தார், கஜாகர்சிங் ஆகியோர் சந்திக்கப்பட்டனர். ராதாசுவாமி, சிவசர்ச்சா, கபீர்மத், பஜ்ரங்க்தல் போன்ற மதவாத அமைப்புகள் கொடுத்து வருகிற எதிர்ப்புகள் மாறவும், இப்பணித்தள ஊழியருடைய பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 02 ரையாம்

கமர்டோலி, இட்ரவா, நூர்சௌவுக், ரன்வே, பாட்சமைலா, லஷ்மிபூர் சப்டியா, கராஸ்டோல், சக்பவானி, சிங்காசோன் ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. நூர்சௌவுக், ரன்வே, சப்டியா, பாட்சமைலா, கராஸ்டோலா ஆகிய இடங்களில் வீட்டுசபை நடத்த தேவன் கிருபை செய்ததற்காகவும், சவல்தேவிக்கு புற்றுநோயிலிருந்து ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காகவும் துதியுங்கள். ஊழியத்திற்கு விரோதமாக செயல்படும் மனோஜ்ராஜ், மகேஷ்குப்தா, மஹூல்பாஸ்வான், ராகுல்பாஸ்வான் ஆகியோரை தேவன் சந்திக்கும்படியாகவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 03 கஷ்ரெயினி

அட்ஹர், சோன்ஹா, பக்டிஹா, மேதா, நனௌரா, மகேஷ்பட்டி, வாஷ்தேவ்பூர், ரம்ஷலா, சிகனி, கோடியா, பிகி ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 12 வருடங்களாக எக்ஸிமா வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த பூலோதேவிக்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாமலிருக்கும் லலிதாதேவியின் கர்ப்பத்தை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாகவும், இப்பணித்தள ஊழிய வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 04 கஜௌலி

கலுவாஹி மற்றும் அஹ்மாதா பகுதியில் பிரச்சாரமையத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பாராபாலி, நாஜிர்பூர், தோஸத்பூர், சிவிபட்டி, அஹ்மாதா, பேல்ஹவாட் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டன. சோனிகுமாரி, ரூனாகுமாரி ஆகியோருக்கு பிசாசின் கட்டுகளிலிருந்து ஜெபத்தின் வாயிலாக கிடைத்த விடுதலைக்காக துதியுங்கள். மித்லேஷ்குமார் மற்றும் பிரபுபாஸ்வான் ஆகியோருக்கு புற்றுநோயிலிருந்து சுகம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியருடைய குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 05 மணிகாச்சி

விஷௌல், கனோகர், பூல்வன் ஆகிய புதிய கிராமங்களில படக்காட்சி வாயிலாக முதன்முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மணிகாச்சி, மஹாதேவ்போக்கர், கங்கௌலி, பிரஹம்புரா, ராம்நகர், தரௌனிமோட் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக திலிப்சௌபால், பூரன்சௌபால், லூடிஸ்யாதவ், விரவின்யாதவ், விஷ்னுதேவ் பாஸ்வான் ஆகியோர் புதிதாக சபைக்கு வருகிறதற்காக துதியுங்கள். இப்பணித்தளத்தில் ஆராதனை நடத்த சபை கட்டப்படவும், சாத்தானுடைய தந்திரங்கள் ஊழியப்பகுதிகளிலிருந்து நிர்மூலமாகவும், இப்பணித்தள ஊழியரின் உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 06 நிர்மலி

பதுவா, பேல்ஹி, குல்ஹரியா, இட்டஹரி, முசஹரிடோலா, ஹரியாஹி, பஜ்ஜிராடோலா, நிர்மலிபஜார், சன்பத்தஹா, ராதோபூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. 50 பேருக்கு சுவிசேஷக்கைப்பிரதிகள்

மற்றும் புதிய ஏற்பாடு கொடுத்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சபையில் ஞாயிறு ஆராதனை, வாலிபர் கூடுகை, ஞாயிறு பள்ளி சிறப்பாக நடைபெற்றுவருவதற்காகவும், ஹெப்படைட்டஸ்.பி வியாதியினால் பாதிக்கப்பட்ட அர்ஜூன் பன்ஜிராவிற்கு ஜெபத்தின் வாயிலாக அற்புத சுகம் கிடைத்ததற்காகவும் துதியுங்கள். புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க வாசல் திறக்கப்படவும், இப்பணித்தள ஊழியரின் மகள் ரூஹமாகுமாரிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்கவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 07 தர்பங்கா

டோம்கல், தேலா, பபனிபட்டி ஆகிய புதிய கிராமங்களில் சவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கோவுலக், பைரோபட்டி, சுன்னாபட்டி, பேலாபாகூப், அல்லப்பட்டி, மதுராபூர், டிசப்டாட் ஆகிய கிராமங்களில் புதிய ஏற்பாடு, மற்றும் சுவிசேஷக்கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. நீமாகுமாரிக்கு சரீர பெலவீனத்திலிருந்து ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். இப்பணித்தள ஊழிய வளர்ச்சிக்காகவும், ஊழியரின் மகன் ஜோன்குமாருக்கு நல்ல வேலை கிடைக்கவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 08 மதுபனி

இப்பணித்தளத்தில் இக்கோட்டத்தின் தலைமை அலுவலகம் செயல்பட்டுவருகிறது. இக்கோட்ட ஊழியர்களுக்கான ஒரு நாள் ஊழியர் கூடுகையில் கலந்து கொண்ட 36 ஊழியர்கள் இக்கோட்ட ஊழிய வளர்ச்சிக்காக ஜெபித்தார்கள். பெல்வார், நவ்கஹி, ரஹிகா, கக்ரோல், கலுவாஹி, மோகன்பூர், ஹாட்டி ஆகிய கிராமங்களில் புதிய ஏற்பாடு மற்றும் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. காசநோயினால் பாதிக்கப்பட்ட குலோவிற்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். இக்கோட்டத்தின் அனைத்து ஊழியர்களுக்காகவும், மதவாத அமைப்பினரின் மனந்திரும்புதலுக்காகவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 09 ராஜ்நகர்

கர்மௌலி, புரஹிதாடோல், டைஹஜா, ரூஹேலி, பர்ஹாரா ஆகிய புதிய கிராமங்களில் சுவிசேஷ கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அல்லிசௌவுக், கோயிலக், மஹேய்பட்டி, டுமரியாஹி, ஜரஹி, லூகாவ், பட்காமா, நக்டி ஆகிய கிராமங்களில் பின்தொடர்

ஊழியங்கள் செய்யப்பட்டது. 1500 பேருக்கு புதிய ஏற்பாடு மற்றும் சுவிசேஷக் கைப்பிரதியின் வாயிலாக சுவிசேஷம் கடந்து சென்றது. அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்த மனோஜ்பாஸ்வான், விக்னேஷ்சௌதிரி, சத்பால்சௌதிரி, சுஜித்குமார் ஆகியோருக்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த விடுதலைக்காக துதியுங்கள். சஞ்சுகுமாரிக்கு வலிப்பு வியாதியிலிருந்து சுகம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியருடைய மகன் முகேஷ் திருமணத்திற்காகவும், இப்பணித்தள ஊழிய வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 10 டோர்பூர்

ஷிரக்பூர், மஜ்வார், கைலி போன்ற புதிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பூபரி, முஹமத்பூர், பாஸோபட்டி, டோர்பூர், மபௌர், நான்பூர், கோடலி, ராம்டோலா, ததரி ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சபையில் வாலிபர் கூட்டம், பெண்கள் கூட்டம், ஞாயிறு ஆராதனை சிறப்பாக நடைபெற்றுவருவதற்காக துதியுங்கள். சபை விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளுடைய திருமண காரியம் மற்றும் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

PEACE III **கோட்டம்**

ஆகஸ்ட் 11 லோரியா

பாக்லோச்சன், மடியரியா, ஷேக்நுனியா, கைரடியா, பேல்வாலகன்பூர், பராவுடோலா ஆகிய புதிய கிராமங்களில் முதன்முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கனௌலி, சூகௌலி, மரியஹான், சிஸ்வரியா, மங்குராஹா, மௌலாநகர், தத்வா, காங்குலா, ஜவாஹீர்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடு வாயிலாக 325 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றதற்காகவும், புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க வாசல் திறந்தமைக்காகவும் துதியுங்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாமிலிருக்கும் கியான்திதேவிக்கு கர்த்தர் அற்புதம் செய்யும்படியாகவும், அந்தகார சக்திகளின் கிரியைகள் ஊழியப்பகுதிகளிலிருந்து நிர்மூலமாகவும், இப்பணித்தள ஊழியருடைய உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 12 வால்மிகிநகர்

மல்கௌலி, நௌரங்கியா, தரம்பூர், சிவ்னாஹா, சகுவானவா ஆகிய இடங்களில் வீட்டுசபை மற்றும் பிரச்சார மையத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

பிப்ராகோட்டி, தருவாரி, அட்ஹர், பேல்ஹவா, ரேஹூவா டோலா, சக்தஹ்வா, குட்ஹவா, சகுவானவா, நிதிஷ்நகர், தாருடோலா, நௌரங்கியா, கனௌலி, சிவ்னாஹா, சம்பாபூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியங்கள் செய்யப்பட்டன. தொழு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த மோதிலாலுக்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள கிராமங்களில் தேவன் கிரியை செய்யவும், இப்பணித்தள ஊழிய வளர்ச்சிக்காகவும், ஊழியருக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 13 ராம்நகர்

சிமர்ஹனிடோல் பகுதியில் படகாட்சி ஊழியத்தின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. புதிய ஏற்பாடு மற்றும் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 500 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றதற்காகவும், அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து அனுகுமாரிக்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காகவும் துதியுங்கள். விஜய் சுனிதா தம்பதியர் குடும்ப பிரச்சனை மாறவும், இப்பணித்த ஊழியரின் சரீர சுகத்திற்காகவும் அவருடைய குடும்பத்தினருக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 14 நௌத்தன்

மங்கல்பூர், தபரியா, மதுவாகா, பனௌரா, பாட்டக்பஜார், தபௌலியா, லஷ்மிபூர், சாந்த்பூர், வீர்வரவா, உச்சக்டோலி, ஹரிசன்டோலி, சிவ்ராஜ்பூர், பட்கௌலி, புலியாகட், பாண்டேடோலா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 300 பேருக்கும் புதிய ஏற்பாடு வாயிலாக 180 பேருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இப்பணித்தள ஊழியருடைய சகோதரர் குடும்பமாக இரட்சிக்கபட்டதற்காகவும், தனிநபர் ஊழியத்தின் வாயிலாக சோன்கர்ராம், சியாம்ஷா, சீத்தாதேவி, பபுலு, கிருஷ்ணா, சந்தோஷ், பிரேம்பிரகாஷ், பிரதாப், ராஜா ஆகியோர் சந்திக்கப்பட்டதற்காகவும் துதியுங்கள். இப்பணித்தளத்தில் சபை கட்ட நிலம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியரின் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 15 மஜௌலியா

தனிநபர் ஊழியத்தின் வாயிலாக ரீட்டாதேவி, ராஜேஷ் சர்மா, ரேணுதேவி, ஜக்ஷர்மா, நிதிஷ்குமார், பூஜாகுமாரி, நந்தாதேவி, சுரேஷ்ஷர்மா, சோனிகுமாரி, சோனாமதி, கிருஷ்ணமோகன், தீபக்சாஹ் ஆகியோருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பர்ஹையாடோலா, சோனார்பட்டி, ஹரிஜன்டோலி, சேமரா,

பர்ஸா, பரபா, கேசோவன், ராணிபக்டி ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சரீர பெலவீனத்திலிருந்து ஜெபத்தின் வாயிலாக ரீட்டா தேவிக்கு கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். இப்பணித்தளத்தில் ஆராதனை நடத்த தடை செய்கிறவர்களை தேவன் சந்திக்கும்படியாகவும், இப்பணித்தள ஊழியருடைய பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 16 ஜகதீஷ்பூர்

சோனோவல், கோதர்ஹான், முரதியா, அக்ரவா ஆகிய இடங்களில் பிரச்சார மையத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மட்டியரவா, ஜவாஹீர், அகரவா, முரதியா, பாட்டக்பஜார், கமுனியா, திவுலியா, அஹ்பர்குடியா, அஹ்பர்ஷேக், ஆம்வா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. வலிப்பு வியாதியினால் பாதிக்கபட்டிருந்த இந்துதேவிக்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாமிலிருக்கும் ரேணுதேவிக்கு கர்த்தர் அற்புதம் செய்யும்படியாகவும், இப்பணித்தள ஊழியரின் தகப்பனார் மரணமடைந்துவிட்டார் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 17 சுஹாடி

படுகியா, கைத்வலியா, பலிராஜ்பூர், டேங்ரஹியா, பரோஹியா, லோகோரியா, விருக்திடோலா, சன்பட்டியா, கிதோரா, மஹுவா, உக்ரசேன்டோலா, உபஹயாடோலா, பனாமாடோலா, வஸந்த்பூர், டேங்ரஹியா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியங்கள் செய்யப்பட்டன. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 250 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பிரச்சாரமையங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காகவும், பணித்தளத்தில் ஜெய்குருதேவ், ஓம்சாந்தி, ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளினால் வரும் பிரச்சனைகள் மாறவும், சபை விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், பணித்தளத்தில் நடைபெறுகிற அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 18 பைரியா

பூல்வரியா, பட்வலியா, சிரிசியா, லௌடியா, பவானிபூர், பட்ரௌவன், போக்கரியா, மூர்க்கஹி, பலுவா, டுமரியா, லகனி, மட்பர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 80 பேர் சந்திக்கப்பட்டனர். கலவாடோலா, பைரியா ஆகிய இடங்களில் சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. சில வருடங்களாக பிசாசின் கட்டுகளிலிருந்த சுரேந்திரராமிற்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த

சுகத்திற்காக துதியுங்கள். சக்கரை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் நிக்கித்தாகுமாரியின் சுகத்திற்காகவும், பணித்தள ஊழியரின் பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 19 பெத்தியா

ஆதிவாசிகள் வாழும் பகுதியான பன்கட்டுவா என்ற இடத்தில் படக்காட்சியின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கும்மியா, அயர்வால், ரெகமான், சக்கினி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. ஒழுங்காக நடத்தப்பட்டு வருகிற சபை ஆராதனை, வாலிபர் கூட்டம், ஞாயிறு பள்ளி கூடுகைக்காக துதியுங்கள். பக்ஹா பகுதியைச் சுற்றியுள்ள மக்கள் பாவசாப கட்டுகளிலிருந்து விடுதலைபெறவும், இப்பணித்த ஊழியருடைய சகோதரரின் திருமணத்திற்காகவும், ஊழியருடைய சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 20 சப்வா

பேடியாரி, சேவாயா, கோடர், கிவாடார், மட்டிஹரவா ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் கொடுத்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மானிக்பூர் மற்றும் விருக்திபூர் ஆகிய இடங்களில் படக்காட்சி ஊழியம் செய்யப்பட்டது. மஞ்சள்காமாலை நோயிலிருந்து ஜெபத்தின் வாயிலாக ராம்பிரவேஷ் மகனுக்கு கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். இப்பணித்தளத்தில் காணப்படும் ஊழிய எதிர்ப்புகள் மாறவும், இப்பணித்தள ஊழியரின் பெற்றோர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

போஜ்புரி III கோட்டம்

ஆகஸ்ட் 21 பாரு

குபைலி, பதேஹாபாத், கல்யான்பூர், சதூர்பட்டி, சப்ரா, பாரு, ரத்வாரா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு விசுவாசிகளின் வீடுகளில் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. சுவிசேஷக் கைபிரதிகள், நற்செய்தி புஸ்தகங்கள், புதியஏற்பாடுகள் வழங்கி 400 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மூன்று புதிய கிராமங்களில் ஊழியத்திற்கு வாசல் திறந்ததற்காக துதியுங்கள். ஞானஸ்நானம் பெற ஆயத்தமாக இருக்கிற 15 பேருக்காகவும், இப்பணித்த ஊழியரின் பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும் ஜெபியுஙங்கள்.

ஆகஸ்ட் 22 முசப்பர்பூர்

நர்வளி, ராஜ்வாடா, சந்தாவாரா, மிடன்பூர், பேளா, ரோகுவா, மாலிகாட் ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தனிநபர்

ஊழியத்தின் வாயிலாக ஜிதேந்தர்குமார், ரித்திக்குமார், சம்பாகுமாரி ஆகியோர் விசுவாசத்திற்குள் வந்தமைக்காகவும், ரீனா தேவிக்கு நல்லவேலை கிடைத்தமைக்காகவும் துதியுங்கள். சில மாதமாக வயிற்றுவலியினால் பாதிக்கப்பட்டுவருகிற சஞ்ஜெய்ராமிற்கு சுகம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியருடைய தாயாரின் சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 23 மனேர்

லயி, துள்சிடோலா, ஹல்திசப்டா, காஜிமுகல்லா, மனேர்பஜார், மஹினவா, சாதிக்பூர், கௌரேயாஸ்தான், ரகேஷ்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தர்வேஸ்பூர் என்ற கிராமத்தில் வீட்டு ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டுவருகிறது. சபை ஆராதனையில் கலந்து கொள்கிற 2 பேர் வேதாகம வகுப்பு படிக்க ஆயத்தமாக இருப்பதற்காக துதியுங்கள். குழந்தை செல்வத்திற்காக ஏங்கியிருக்கும் உஷாதேவிக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கவும், இப்பணித்தள சபை விசுவாசிகளின் பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும், ஊழிய வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 24 தேவரியா

இப்பணிதளத்தை சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடு புத்தகத்தின் வாயிலாக 300 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தர்பாரி, தூம்நகர், மோகபத்பூர், சலாக்பூர், லக்னௌரி, ஷாக்பூர், தேவரியா, விசுன்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சன்னா குமாரியின் கர்ப்பப்பையில் இருந்த கட்டி ஜெபத்தின் வாயிலாக கரைந்ததற்காகவும், ஒரு வருடமாக மனநலம் பாதிக்கப்பட்டிருந்த சந்தேஷ்வர் ராமிற்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காகவும் துதியுங்கள். காசநோய், ஆஸ்துமா பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள பிதுராமிற்கு கர்த்தர் சுகம் தரும்படியாகவும், இப்பணித்தள ஊழிய வளர்ச்சிக்காகவும், ஊழியருடைய மனைவி பிள்ளைகளுடைய சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 25 சம்பத்சக்

சம்பத்சௌவுக், ஜனாசௌவுக், பதேஹ்பூர், பட்கிசிப்ரா, அல்வக்ஸ்பூர், உத்யாளி, கன்ஹாப் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. ராம்பூர் கிராமத்தில் புதன்கிழமை தோறும் ஜெபக்கூட்டம் நடைபெற்று வருகிறது. உதய்பூர் கிராமத்தில் வெள்ளிகிழமை தோறும் உபவாசக் கூட்டம் சிறப்பாக

நடைபெற்றுவருவதற்காகவும், சுகவீனப்பட்டு மிகவும் மோசமாக இருந்த ரேக்கா என்ற சகோதரிக்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காகவும் துதியுங்கள். துக்கித்மஸி என்ற சகோதரருக்கு கண் பார்வை கிடைக்கவும், இப்பணித்தள ஊழியருடைய தகப்பனாரின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 26 மொகாமா

இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள பக்ரா, லல்லுசௌவுக், பாவுசௌவுக் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதியின் வாயிலாக சுவிசேஷம் கடந்து சென்றது. மனிக்பூர், பிதிசௌவுக் செரய்யா, கடக்செரையா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. எதிர்ப்புகள் மத்தியிலும் இஸ்லாமிய மக்கள் மத்தியில் ஊழியம் நடைபெற்று வருவதற்காக துதியுங்கள். இப்பணித்தளத்தில் காணப்படும் பிசாசின் கிரியைகள் அழிக்கப்படவும், இப்பணித்தள ஊழியரின் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 27 நபத்பூர்

தனிநபர் ஊழியத்தின் வாயிலாக பிரபாவதிதேவி, விஜய்பாஸ்வான், ரித்தேஷ்வர்மா, மங்கோதேவி, பான்பத்திதேவி, ராம்தாஸ், சோனி, பூனம் தேவி, அக்கிலேஷ் ஆகியோர் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். ஜோதிப்பூர், தரேத்டோலா, உச்சௌரி, சோட்டி டேங்கரைலா, கோரங்வா, பாட்லிபுத்ரா, சர்மாபன்சரா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. இப்பணித்தளத்தில் சபைக்கென வாங்கப்பட்ட நிலம் பிரச்சனையாக இருப்பதுடன், நீதிமன்றம் போட்டுள்ள தடை உத்தரவு மாறவும், சபை கட்டப்படவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 28 சக்சோஹரா

புத்துனிசௌவுக், மில்கிசௌவுக், காஜிசௌவுக், தயாசௌவுக், பன்சில்நகர், பஹதூர்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷ கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடு வாயிலாக கார்ஜான், ஜமுனிசௌவுக், பாசோபாக், பாஜிபூர், அம்பேத்கார்நகர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தனிநபர் ஊழியத்தின் வாயிலாக சந்திக்கப்பட்ட விரேந்தர், டாக்டர். உமேஷ் பிரசாத், தானி சாஹ், துர்க்கா சர்மா ஆகியோர் சபை ஆராதனையில் கலந்துகொள்கிறார்கள். விரேந்தர் சர்மாவுக்கு குடல் இறக்கம் பாதிப்பிலிருந்து ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். இப்பணித்தள ஊழியரின் திருமண வயதுள்ள பிள்ளைகளுக்கு ஏற்ற துணை கிடைக்கவும், ஊழியருடைய மனைவியின் சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 29 தனியாவன்

கோல்கார் கிராமத்தில் சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டுவருகிறது. குன்டலி, ஜீவன்சௌவுக், முன்டா, சிகந்தாபூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தனியாவா, நூரிசௌவுக், சோட்கிவயி, கோல்கர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பாம்பு கடித்து விஷம் ஏறிய விஷால்குமாருக்கு ஜெபத்தின் வாயிலாக கிடைத்த சுகத்திற்காக துதியுங்கள். ஆறு மாதங்களாக கைவீக்கம், அரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள சாந்திகுமாரிக்கு கர்த்தர் சுகம் கொடுக்கவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 30 தானாபூர்

இப்பணித்தளத்தில் இக்கோட்டத்தின் தலைமை அலுவலகம் செயல்பட்டுவருகிறது. இக்கோட்ட ஊழியர்களுக்கான ஒரு நாள் ஊழியர் கூடுகையில் கலந்து கொண்ட 28 ஊழியர்கள் இக்கோட்ட ஊழிய வளர்ச்சிக்காக ஜெபித்தார்கள். இப்பணித்தள ஊழியரின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள புருஆ ஊழியத்திற்காகவும், இப்பணித்தள சபை விசுவாசிகளுக்காகவும், இப்பணித்தள ஊழியரின் மகனுக்கு அடிக்கடி ஏற்படும் தலைவலியிலிருந்து சுகம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 31 வைஷாலி

சகாரிசௌவுக், உருரிபஜார், தாராசௌவுக், முபாரக்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தானாபூர் ரயில்நிலையம், சிவாஜிநகர், குறிஞ்ஜி மருத்துவமனை மற்றும் ருகுனாமோடு ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சபை ஊழியம், புதன்கிழமை தோறும் நடைபெறும் வேதபாட வகுப்பு சிறப்பாக நடைபெற்றுவருவதற்காக துதியுங்கள். பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சுதர்சன்ராமிற்கு கர்த்தர் சுகம் தரும்படியாகவும், இப்பணித்தளத்தில் நடைபெறும் அனைத்து ஊழியங்களுக்காகவும், பணித்தள ஊழியருடைய உறவினரின் இரட்சிப்பிற்காகவும், சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட கிராமங்களில் தேவன் கிரியை செய்யும்படியாகவும் ஜெபியுங்கள்.

கிராம ஊழியர் பயிற்சி முகாம்

ஜெம்ஸ் மேற்கு மண்டலத்தின் சப்ரா பணித்தள சபையில் ஜூன் 6 மற்றும் 7 ஆகிய இரு தினங்கள் சபையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் VVP (Voluntary / Vicinity Pastors) 28 பேர் பங்கேற்றனர். சகோ. கிறிஸ்டோபர் முருகன், சகோ. சந்திரிக்கா மற்றும் சகோ. ரவி ஆகியோர் பங்கேற்றோர்களுக்கு பயிற்சியளித்தனர். இரட்சிப்பு, ஞானஸ்நானம், அபிஷேகம், அழைப்பு, சுவிசேஷம் போன்ற தலைப்புகளின் கீழ் வேதாகமத்திற்கடுத்த மற்றும் ஊழியங்களுக்கடுத்த காரியங்களைக் குறித்த பயிற்சி பெற்று ஆத்தும அறுவடைக்காக பங்கேற்றோர் ஆயத்தமாக்கப்பட்டனர்.

GEMS Action Centers

Chennai	No. 8, 3rd Jeevan Nagar, Adampakam, Chennai - 600088 Ph. 044-22670099
Coimbatore	No.2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : +919344824072
Dindugal	43/20C. Samiyar Thottam, Nagal Nagar, Dindugal - 624003 Cell : +919942824035
Erode	No. 34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode - 638011 Cell: +919486976202
Kodaikanal	No. 1/199-1F, Packiapuram, Kodaikanal - 624101. Cell : +919443221776
Kovilpatti	No 11, Theppakulam street, Kovilpatti - 628501, Ph. : 04632-225890
Marthandam	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K. Dist., - 629165 Cell : +919788689771, +919486357950
Nazareth	No. 3, Dasan street, Nazareth - 628617, Ph. : 9442094110
Sivakasi	3/1350/9, Sathur Road, Parraipatti, Sivakasi - 626189 Cell : +919843088840
Nagercoil	66-E, Bright street, Nagarcoil - 629009 Cell : +919894965520
Tuticorin	38, Sarangapani street, Tuticorin - 2, Cell : +919442210629
Tuticorin	J.S.Traders, Hotel Geetha Complex, Polepettai, Tuticorin - 628002 Cell : +919442166061
Vellore	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore - 632009 Cell : +919952545181

REGIONAL ACTION CENTERS

Chennai	Plot No. 19-A, 3rd street, Megala Nagar, Vengaivasal - 600073, Cell : +919444763141
Coimbatore	No. 7, Laxmi puram, 1st Cross, EB Colony, TVS Nagar, Coimbatore - 641025 Cell : 9442934613
Trichy	Mahanaim, 1, Abdul Gazoor street, Kajah Nagar - 620020 Cell : +919443555577
Tirunelveli	14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai - 627002 Cell: +919443113322a

General Action Center - TamilNadu

GEMS, No. 14, Jeba Nagar, Vasanthapuram South, Near Vijaya Garden, Tirunelveli - 627005 Email : nellaioffice@gemsbihar.org Mobile : 9488771655

Promotional Coordination Center - TamilNadu

No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai-625018
Email : tnpromotions@gemsbihar.org Mobile : +919865583563

OTHER STATE ACTION CENTERS

Bangalore	No. B-9, Gogappa Layout, Near Railway Gate, K G Halli, A C Post, Bangalore - 560045 Tel: +91 9448517025
Navi Mumbai	Plot No 58, Nandanvan CHS, Lane - 3, Sector - 17, Nerul (East), Navi Mumbai - 400 706 Cell : +919322730294 +919820701775
Pondicherry	No. 5, Kamarajar Street, Tagore Nagar, Lawspet, Pondicherry - 605008 Cell : +919486796631
Kerela	No. 4, N.V. Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005 Mobile : +919486357950

GEMS National Action center

No: 29, Church street 1st Cross, Near Simpolo Tiles shop,
Kalkere Main Road, Horamavu, Bangalore -560043
Tel: +91 9443429735 E-Mail : promotions@gemsbihar.org

GEMS MEDIA

Transforming Nations through Media Ministry

Regd. office :

GEMS Educational Media Services

11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

if undelivered please return to

GEMS Action Center

14, Jeba Nagar,
Vasanthapuram South,
Near Vijaya Garden,
Tirunelveli - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

Private circulation

தனிப்பிரதி ரூ. 10-
ஆண்டு சந்தா ரூ. 100-

To

....

....

....

....